# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 53
மார்ச் 2013

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**எசேக்கியேல்**

2601 உன் இருதயம் மேட்டிமை கொள்ளாதிருப்பதாக (28:2)
2602 உன் இருதயம் உன் செல்வத்தினால் மேட்டிமையாகாதிருப்பதாக (28:5)
2603 உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாகாதிருப்பதாக (28:17)
2604 உன் வளர்த்தியிலே மேட்டிமையாகாதே (31:10)
2605 உன் இருதயம் மேட்டிமையினால் உயர்ந்து போகாதிருப்பதாக (31:10)
2606 தண்ணீரின் ஓரமாய் வளருகிற எந்த விருட்சமும் தன் உயர்த்தியினாலே மேன்மை பாராட்டக்கூடாது (31:14)
2607 தண்ணீரைக் குடிக்கிற எந்த மரமும் தன் உயர்த்தியினாலே தன்மேல் நம்பிக்கை வைக்கக்கூடாது (31:14)
2608 தகப்பனை நிர்வாணமாக்கல் கூடாது (22:10)
2609 தூர ஸ்திரியைப் பலவந்தப் படுத்துதல் கூடாது (22:10)
2610 அயலானுடைய மனைவியோடே அருவருப்பானதைச் செய்யாதே (22:11)
2611 உன் மருமகளைத் தீட்டுப்படுத்தாதே (22:11)
2612 உன் தகப்பனுக்குப் பிறந்த உன் சகோதரியைப் பலவந்தம் பண்ணாதே (22:11)
2613 அயலான் மனைவியைத் தீட்டுப்படுத்தாதே (33:26)
2614 கர்த்தர் அநுக்கிரகஞ் செய்யும்படி நீ கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணு (36:37)
2615 பரிசுத்தமானதற்கும் பரிசுத்தமில்லாததற்கும் தீட்டானதற்கும் தீட்டல்லாதற்கும் இருக்கும் வித்தியாசத்தைத் தெரிந்து கொள் (44:23)
2616 நீ ஆயத்தப்படு; உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து; நீ அவர்களுக்கு காவலாளனாயிரு. (38:7)

**தானியேல்**

2617 போஜனத்தினாலும் பானத்தினாலும் உன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று தீர்மானம் பண்ணு (1:8)
2618 அகந்தையாய் நடவாதே (4:37)
2619 கர்த்தருடைய மகிமை உன்னை விட்டு அகன்று போகாதிருக்க, உன் இருதயம் மேட்டிமையடையாமலும், உன் ஆவி கர்வத்தினாலே கடினப்படாமலும் இருப்பதாக (5:20)
2620 பரலோகத்தின் ஆண்டவருக்கு விரோதமாக உன்னை உயர்த்தாதே (5:23)
2621 தம்முடைய கையில் உனது சுவாசத்தை வைத்திருக்கிறவரும், உனது வழிகளுக்குகெல்லாம் அதிகாரியுமாகிய தேவனை மகிமைப்படுத்தா மலிராதே (5:23)
2622 காணாமலும், கேளாமலும், உணராமலும், இருக்கிற வெள்ளியும் பொன்னும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழாதே (5:23)
2623 மேலதிகாரிகளுக்கு முன்பாக நீதிகேடு செய்யாதே (6:22)



2624 பெருமையானவைகளைப் பேசும் வாய் வேண்டாம் (7:8)
2625 மூர்க்கமுகம் வேண்டாம் (8:23)
2626 சூதான பேச்சு வேண்டாம் (8:23)
2627 வஞ்சகத்தைக் கைகூடி வரப்பண்ணாதே (8:25)
2628 இருதயத்தில் பெருமை கொள்ளாதே(8:25)
2629 கர்த்தருடைய கற்பனைகளையும் நியாயங்களையும் விட்டு அகலாதே (9:5)
2630 கர்த்தருடைய நாமத்தினாலே பேசுகிற தீர்க்கதரிசிகளாகிய ஊழியக்காரருக்குச் செவிகொடாமற் போகாதே (9:6)
2631 கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம் செய்யாதே (9:7)
2632 கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதே (9:8,11,15)
2633 கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணாதே (9:9)
2634 துன்மார்க்கனாய் நடவாதே (9:15)
2635 நீதியைச் செய் (4:27)
2636 சிறுமையானவர்களுக்கு இரங்கு (4:27)
2637 உண்மையுள்ளவனாயிரு (6:4)
2638 உன் அக்கிரமங்களை விட்டுத்திரும்பு (9:13)
2639 ஞானவானாயிரு (12:3,10)
2640 அநேகரை நீதிக்குட்படுத்து (12:3)
2641 கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணி, பாவ அறிக்கை செய் (9:4,20)
2642 கர்த்தருடைய முகத்தை நோக்கிக் கெஞ்சு (9:13)
2643 தானியேலைப் போல பரலோகத்தின் தேவனை நோக்கி இரக்கம் கேள் (2:17)
2644 தினமும் தேவனுக்கு முன்பாக முழாங்காற்படியிட்டு, ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்து (6:10)
2645 தேவன் உனக்குச் செவிகொடுத்தபடியால், பரலோகத்தின் தேவனை ஸ்தோத்தரி (2:19)
2646 தேவனாகிய கர்த்தரைத் தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல், அவரையே நம்பு (3:28)
2647 உபவாசம் பண்ணி, ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் ஆண்டவரைத் தேடு (9:3)
2648 உன் நீதியை அல்ல, கர்த்தருடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, உன் விண்ணப்பங்களை அவருக்கு முன்பாகச் செலுத்து (9:18)
2649 தேவனுக்கு முன்பாகக் குற்றமற்றவனாயிரு (6:22)
2650 பயப்படாதே (10:12,19) திடங்கொள், திடங்கொள் (10:9)


**வெளிவந்துவிட்டது! வாங்கி பயனடையுங்கள்!**

**'வெற்றிப் பாதையில் நான்' மாணவர்களுக்கான சிறப்பு புத்தகம்**

விலை ரூ. 10/-

**சகோ. பொற்செல்வன் ஆசீர் செய்திகள் அடங்கிய DVDகள்**

**1. உன்னத சீயோன் 2. வேதத்தின் மகத்துவம் 3. இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை**

*ஒவ்வொன்றின் விலை ரூ. 30/-*

# ஜெபிப்போம் செயல்படுவோம்

**(S. Jebaraj, President, Grace Ministries)**

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த இதழில் நீங்கள் வாசித்தபடி மோசையைப் போல, கர்த்தருடைய சமுகத்திற்குச் செல்ல, அதிகாலமே எழுந்து ஆயத்தமாகி, அவர் சமுகத்தில் நிற்கத் தீர்மானித்து செயல்படுவீர்கள் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். இந்த ஜெபவாழ்க்கையில் இன்னும் வளர, வளம் பெற உங்கள் சொந்த ஜனத்தின் இரட்சிப்பிற்காக, விடுதலைக்காக நீங்கள் ஜெபத்துடன் செயல்பட தீர்மானிக்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார்.

அமலேக்கின் கை கர்த்தருடைய சிங்காசனத்துக்கு விரோதமாயிருந்த படியால் தலைமுறை தலைமுறைதோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும் என்று மோசே கூறினார்.(யாத் 17:16) உன் தேவனாகிய கர்த்தர் உன்னை இளைப்பாறுதல் பண்ணும்போது, நீ அமலேக்கின் பேரை வானத்தின்கீழ் இராதபடிக்கு அழியப் பண்ணக்கடவாய் இதை மறக்கவேண்டாம் (உபா 25:19) என்பது கர்த்தரின் கட்டளை. சாமுவேல் சவுலைப் பார்த்து நீ போய் அமலேக்கை மடங்கடித்து அவனுக்குண்டான எல்லாவற்றையும் சங்கரித்து புருஷர், ஸ்தீரிகள், பிள்ளைகள், குழந்தைகள், ஆடுமாடுகள், ஒட்டகங்கள், கழுதைகள் யாவற்றையும் கொன்றுபோடக்கடவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்.(1சாமு 15:3) என்பதாகச் கூறுகிறார். ஆனால் தீர்க்கதரிசியாகிய சாமுவேல் மூலமாய் உரைக்கப்பட்ட இந்த வார்த்தைகளுக்கு சவுல் கீழ்படியாமற் போனபடியால் கர்த்தர் சவுலை ராஜாவாயிராதபடிக்கு புறக்கணித்து தள்ளினார். அமலேக்கியர்களை யூதர்களும் யூதர்களை அமலேக்கியர்களும் அழிக்கத் துடித்துக் கொண்டிருந்தனர். பெர்சியாவின் ராஜா பாபிலோனை தன் வசமாக்கி கொண்டபோது அங்கிருந்தவர்களை சிறைபிடித்தான். பாபிலோனில் சிறைப்பட்டு கிடந்த யூதர்களில் சிலர் மறுபடியும் பெர்சியா ராஜாவினால் சிறைபிடிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டார்கள். சூசான் அரண்மனையில் சேவிக்கும்படி சில ஞானவான்களை தெரிந்து எடுத்திருந்தான். அவர்களில் ஒருவர் தான் மொர்தெகாய். சவுலினாலே தப்பவிடப்பட்டு சாமுவேல் தீர்க்கதரிசியினால் கொல்லப்பட்ட அமலேக்கியனான ஆகாக் ராஜாவின் வம்ச வழியில் வந்தவன் ஆமான். யூதரின் சத்துருவான இந்த ஆமான் யூதனாகிய மொர்தெகாயையும் யூத குலத்தினர் அனைவரையும் அழிக்கும் படி திட்டம் தீட்டினார். அத்சாள் என்ற யூதபெயருடைய எஸ்தர் என்று அழைக்கப்பட்ட மொர்தெகாயின் வளர்ப்பு மகள் வஸ்தி ஸ்தானத்திலே பட்டத்து ஸ்திரீயாக்கப்பட்டாள். (எஸ் 2:17) எஸ்தர் மொர்தெகாய் தனக்கு கற்பித்திருந்தபடி தன் பூர்வோத்தரத்தையும் தன்குலத்தையும் தெரிவிக்காதிருந்தாள்.(எஸ் 2:20).



### 1. சொந்த ஜனத்தின் மேல் கரிசனை

இந்நாட்களில் மனிதர்கள் சுயநலக்காரர்களாகவே காணப்படுகின்றனர். தன் மனைவி, பிள்ளைகள் என்று ஒரு சிறிய வட்டம் அமைத்துக் கொண்டு அதற்காகவே செயல்படுகிறவர்களாகக் காணப்படுகிறார்கள். தன் பெற்றோர் உடன் பிறந்தவர்களைக்கூட தன் குடும்ப அங்கத்தினர்களாக அங்கீகரித்துக் கொள்ளுவதில்லை. ஆனால் வேதம் கற்றுக் கொடுக்கிற காரியம் ஒருவன் தன் சொந்த ஜனங்களை விசாரிக்க வேண்டும் என்பதாக. (1தீமோ 5:8). ஆகாஸ்வேரு ராஜாவின் ஆளுகைக்கு உட்பட்ட சகல நாடுகளிலுமுள்ள சிறியோர், பெரியோர், குழந்தைகள், ஸ்தீரிகள் ஆகிய சகல யூதரையும் ஒரே நாளில் அழித்துகொன்று, நிர்மூலமாக்கவும், கொள்ளையிடவும், கட்டளை பிறந்த பொழுது எஸ்தர் தன் சொந்த ஜனங்கள் மீது கரிசனையுள்ளவளாக இருப்பதைக் காண்கிறோம். (எஸ் 4:13). தன்னுடைய ஜனங்கள் பெரிய அழிவின்று பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாயிருந்தாள். இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் சொந்த ஜனங்கள் மீது கரிசனை கொண்டு அவர்கள் பாவத்தின் அழிவினின்று பாதுகாக்கப்பட்டு பாவ பழக்க வழக்கங்களிலிருந்து விடுதலை பெற பொறுப்புள்ளவர்களாய் மாற வேண்டும்.

### 2. தன்னை மறைத்து கொள்ளுதல்

ஜனங்கள் இன்றைய நாட்களில் தன்னை பெரிதாக பிரபல்யம் செய்கிறவர்களாகவும், விளம்பர விரும்பிகளாகவும் இருக்கிறார்கள். திரைக்குப் பின்னே தன்னை மறைத்துக் கொண்டு செயல்படுகிற மனிதர்களைக் காண்பது அரிதாக இருக்கிறது. எஸ்தரோவென்றால் தன்குலத்தையும், தன்பூர்வோத்தரத்தையும் அறிவிக்காதிருந்தாள். (எஸ்2:10) இயேசு தன் ஊழியத்தின் நாட்களில் முழுமையாய் தன்னை மறைத்து செயல்படுகிறவராய் அற்புதம் செய்கிறவாய் பிதாவுக்கே மகிமை செலுத்துகிறவராய் காணப்பட்டார். நான் என் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை(யோ 5:30) நான்சுயமாய் பேசவில்லை(யோ 11:49) என் வசனங்களை சுயமாய் சொல்லவில்லை (யோ 14:10) என்ற வசனங்கள் இதை தெளிவுபடுத்துகிறது. இயேசு சொன்னார் : சுயமாய் பேசுகிறவன் தன் சுய மகிமையைத் தேடுகிறான். (யோ7:18) யூத ஜனங்களை அழிவினின்று பாதுகாக்க தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட எஸ்தர் தன்னை மறைத்து செயல்பட்டாள். நீங்களும் உங்கள் வாழ்க்கையில் உங்களை மறைத்து தேவனை மகிமைப்படுத்துங்கள். அதிலே உங்கள் தாழ்மை, அர்ப்பணிப்பு, பணிவு, கீழ்படிதல் ஆகிய குணநலன்கள் உங்களை ஆட்கொள்ளும்.

### 3. ஜெபத்துடன் செயல்படுதல்:

அதிகாலை ஜெபமே ஜெயம் என கடந்த இதழின் செய்தியில் கற்றுக் கொண்டோம். ஜெபம் செய்கிறவர்களாய் மாத்திரமல்ல செயல்வீரர்களாகவும் மாறவேண்டும். ஜெபம் செய்து செயல்படாமல் இருப்பது சரியல்ல. செயல்வீரர்களாய் காணப்பட்டு ஜெபிக்காமல் இருப்பதும் சரியல்ல. எனக்காக

உபவாசம் பண்ணுங்கள். நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம் (எஸ்4:16) மொர்தெகாயின் உயிர்மாத்திரமல்ல. அனைத்து யூதரின் உயிர்களும் கேள்விக்குறியாய் மாறிவிட்ட நிலையில் ஒரு உபவாச ஜெபச் சங்கிலி உருவாக்கப்படுகிறது. இவ்விதமாக சட்டத்தை மீறி ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன். நான் செத்தாலும் சாகிறேன் என்று எஸ்தர் ஒரு செயல்வீராங்கனையாய் மாறிவிடுகிறாள். அகாஸ்வேரு ராஜாவினிடத்தில் என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படி பார்க்கக்கூடும்? என் குலத்திற்கு வரும் அழிவை நான் எப்படி சகிக்கக்கூடும்? என்று மன்றாடுகிறாள் எஸ்தர். உபவாச ஜெபங்களும் எஸ்தரின் துணிச்சலான செயலும் ஆமானின் யூதர்களை அழிக்கும் தந்திரவேலைகளை அதமாக்கிப் போட்டது. மொர்தெகாய் கனப்படுத்தப்படுகிறான். ஆமான் மொர்தெகாய்க்காக செய்த தூக்கு மரத்தில் ஆமானே தூக்கிலிடப்பட்டான். எல்லா நாடுகளிலும் எல்லாப் பட்டணங்களிலும் யூதருக்குள்ளே அது மகிழ்ச்சியும் களிப்பும் விருந்துண்டு கொண்டாடும் நல்ல நாளுமாயிருந்தது. அவர்களில் அநேகர் யூதமார்க்கத்தில் அமைந்தார்கள்(எஸ்8:17) எஸ்தரின் அமைதியான அர்ப்பணிப்பும் வல்லமையான உபவாச ஜெபமும் ஞானமும் துணிச்சலான செய்கைகளும் யூத ஜனங்களை அழிவினின்று காத்து இரட்சித்தது. நீங்களும் ஒரு எஸ்தரைப் போல ஜெபத்துடன் செயல்படும்வீரர்களாய் வீராங்கனைகளாய் மாறி பாவத்திலும், பிசாசின்பிடியிலும், சிக்கி அழிவிற்கு நேராய் ஓடிக்கொண்டிருக்கும் உங்கள் ஜனங்களை விடுதலை செய்ய தீர்மானம் செய்வீர்களா?

எனது தீர்மானம் : எஸ்தரைப் போல என் சொந்த ஜனத்தின் இரட்சிப்பிற்காக விடுதலைக்காக ஜெபத்துடன் செயல்பட தீர்மானிக்கிறேன்.(எஸ்4:14-16).

---

**செய்திகள்** **இன்றைய சென்னை**

- 1991 ஆம் ஆண்டு சென்னையில் குவித்த மொத்த குப்பையின் அளவு 600 டன்
- ஆனால் இன்று தினமும் 4 ஆயிரம் டன் குப்பைகள் சென்னையில் குவிகின்றன.
- குப்பைகள் இருவகை ஒன்று மக்கும் குப்பை. இரண்டு மக்காத குப்பை. மக்காத குப்பை சென்னையில் 30 சதவிகிதத்திற்கு குறைவாகவே உள்ளது.
- மருத்துவமனை குப்பைகள் 10 வகைகளாக பிரிக்கப்படுகின்றன. அவை மருத்துவ மனைகளில் 6 வகையாக குப்பை கூடகளில் பிரிக்கப்பட வேண்டும் இது விதி.
- E வேஸ்ட் என்னும் மின்னணு கழிவுகள் ஒவ்வொரு நாளும் சென்னையில் 4500 டன் உருவாகிறது அது மற்ற கழிவுகளை காட்டிலும் அதிகம்.
- கடந்த ஆண்டு 2012இல் சென்னையில் E வேஸ்ட் 28 ஆயிரத்து 789 மெட்ரிக் டன் கொட்டப்பட்டது.
- மின்னணு கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கு சென்னையில் 18 மையங்கள் உள்ளன.
- சென்னையில் 55,000 ஆட்டோக்கள் ஓடுகின்றன.
- 2001இல் 3.10 இலட்சம் வீடுகளில் இருசக்கர வாகனங்கள் சென்னையில் இருந்தது.
- 2011இல் 50.43 இலட்சம் வீடுகளில் இருசக்கர வாகனங்கள் உள்ளது.
- 2001இல் சென்னையில் ஓடிய கார்கள் 3 இலட்சமாகும் இப்போது 8 இலட்சமாகும்.



# என் வெற்றிப் பாதையில்

அருமை இரட்சகரின் பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். என் பெயர் Bamila. இயேசுவை அறியாத கிறிஸ்துவரல்லாத குடும்பத்தில் என்னை 2003ம் ஆண்டு தேவன் தொட்டார். என் தாயார் பெயர் திருமதி. வசந்தி. என் தகப்பனார் பெயர் திரு. மோகன்தாஸ் என் தகப்பனார் வங்கியில் முதன்மை மேலாளராக பணியாற்றி வருகிறார்கள். என் தாயார் தெய்வ பக்தி நிறைந்தவர்கள்.

என் தாயார் வியாதிப்பட்டு படுத்த படுக்கையாகி மரண வாயிலுக்கு நேராய் சென்று கொண்டிருந்தது எங்கள் குடும்பத்தை பாதித்திருந்த நிலையில், நான் மட்டும் தெய்வம் என்பது பொய் என்று இருதயத்தில் நினைத்து வந்தேன். நான் +2 படிக்கும்போது 2001ஆம் ஆண்டு படுக்கையிலிருந்த என் தாயோடு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிரத்தியட்சமாய் "பயப்படாதே நான் உன்னோடு இருக்கிறேன்" என்று பேசி அவர்கள் படுக்கையை மாற்றி இரட்சித்தார். தெய்வ பக்தி துளியளவு கூட இல்லாது இருந்த எனக்கு என் தாயார் தான் வணங்கி வந்த தெய்வங்களை விட்டு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதில் உடன்பாடில்லை. ஆனால் நானோ என் தாயின் படுக்கையை எண்ணிக் கொண்டு வந்திருந்த நாட்களின் தனிமை மாறாதவளாய், இயேசுவை ஏற்க மனதற்றவளாய், God's Power (தேவனுடைய வல்லமை) என்பதில் நம்பிக்கையில்லாமல் Will Power-இல் (சுய பெலன்) நம்பிக்கை வைத்து வாழ்ந்து வந்தேன். இயேசுவை ஏற்றுக்கொண்டதன் மூலம் தன் தாயார் என்னை விட்டு தூரம் போய்விட்டதாய் நினைத்து அவர்களுக்கு முதல் எதிரியாய் ஒரே வீட்டில் வாழ்ந்து வந்தேன். மார்ச் 2001இல் எனது +2 கல்வியை 1017 மதிப்பெண்களோடு முடித்தேன்.

எனது ய.சி. படிப்பை ஓசூர் பட்டணத்தில் உள்ள கல்லூரியில் முதல் வருடம் ஹாஸ்டலில் இருந்து படித்தேன். படிப்பில் நாட்டம் குறைந்து உடனிருந்த மாணவியருடன் அரட்டை, கேளிக்கை என, மனம் விரும்பியதை செய்து இதுதான் கல்லூரி வாழ்க்கை என்ற மனநிலையில் வாழ்ந்து வந்தேன். ஆனால் நான் எவ்வளவு தான் என் மனம் விரும்பினதை எல்லாம் செய்தாலும், அது என் மனதில் தனிமையையும், வெறுமையையும் அதிகமாய் கொண்டு வந்தது. ஒரு வருடத்திற்கு பின்னர் என் பெற்றோர் எனக்காக வங்கியில் பணியிட மாறுதல் பெற்று ஓசூர் வந்து சேர்ந்தனர். இந்த ஒரு வருட இடைவெளியில் எனது தகப்பனாரும் இயேசுவை ஏற்றுக்கொண்டதால் பெற்றோர் இருவரும் ஊழியத்திற்குச் செல்லத் தொடங்கி இருந்தனர். இது எதையுமே ஏற்றுக்கொள்ள மனதில்லாருந்த என் வாழ்க்கையிலும் தேவன் அவரது கிரியையைத் தொடங்கியிருந்தார்.

12ஆம் வகுப்பு வரை நல்ல மதிப்பெண் பெற்றிருந்த நான் படிப்பில் கவனமில்லாமையால் Arears வைக்க தொடங்கினேன். இரண்டாம் வருட முடிவில் Arrears எண்ணிக்கை ஆறானது. முதல் முறையாக என் will power எனக்கு கை கொடுக்காததால் தெய்வத்தை தேடினேன். நான் அறிந்திருந்த தெய்வம் என்று எண்ணிக் கொண்டிருந்தவைகளின் பெயர்களை கூப்பிட்டேன். பக்தியாய் மாறினேன்.

ஆனால் இந்த என் பக்தி எனக்கு கைக்கொடுக்கவில்லை, படிப்பிலும் உதவவில்லை. வேறுவழி தெரியாதவளாய் Arrears Clear ஆனால் போதும் என்று இயேசுவை என் B.E. படிப்பின் மூன்றாம் ஆண்டு துவக்கத்தில் ஒரு சுயநலத்தோடு கூப்பிட்டேன். ஆலயத்திற்கும் செல்ல ஆரம்பித்தேன்.

ஆலயத்தில் தேவன் இவ்வளவாய் அன்பு கூர்ந்தார் என்றும் பாவத்தை மன்னிக்கிற பரிசுத்த தெய்வம் இயேசு என்றும் பிரசங்கிக்கப்பட, வீட்டிற்கு வந்து என்னுடைய அறையில் முழங்கால் படியிட்டேன். என்னை ஏற்றுக்கொள்ளும்படி முதல் ஜெபத்தை உண்மையாய் ஏறெடுத்தேன். என் பாவங்களை மன்னியும் என்று சொன்னேன். என்னே ஆச்சரியம்! இதுவரை நான் மனம் போன போக்கில் வாழ்ந்தபோது இல்லாத சமாதானத்தால் தேவன் என் உள்ளத்தை நிறைத்திருந்தார். கொஞ்சம் கொஞ்சமாய் தேவன் என்னை மாற்றினார். படிப்பில் நாட்டம் வந்தது பெற்றோருக்கு கீழ்ப்படியத் தொடங்கினேன். தேவன் என்னை மாற்றத் தொடங்கியிருந்தார். என் சுபாவங்களில் மாற்றம் ஏற்பட தொடங்கின. அதோடு சினிமா பாடல்களுக்கும் சினிமாவுக்கும் முழு அடிமையாகி இருந்த என்னை அந்த சினிமா இச்சைகளில் இருந்து தேவன் விடுவித்தார். ஆனால் படிப்பில் இன்னும் பின் தங்கியிருந்தேன்.

“உம்முடைய துவக்கம் அற்பமாய் இருந்தாலும், உம்முடைய முடிவு சம்பூரணமாய் இருக்கும்’ யோபு 8:7 என்று தேவன் எனக்கு வாக்குப்பண்ணியிருந்தார். 13 Arrears சேர்த்துவிட்டேன். நான்காம் வருடத்தில் அந்த ஆண்டின் Paper களை சேர்த்து 19 Paperகளுக்கு தேர்வு எழுத வேண்டிய நிலை. இத்தனை Paper யை Clear செய்ய பெலன் இல்லாதிருந்தும், தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தில் நம்பிக்கை வைத்திருந்தான். காலையும், மதியமும் தேர்வுகள் எனக்கு இருக்கும்; அப்போது முழு பாடத்தையும் படிக்க நேரம் இல்லாமலிருந்தாலும், தேவனுடைய வழிநடத்துதலோடு ஜெபத்துடன் படிப்பேன்; நான் படித்த அதே கேள்விகள் தேர்விலும் வர அதை மகிழ்ச்சியோடு எழுதுவேன். தேவன் 19 களையும் ஒரே முறையில் எழுதி வெற்றிப்பெறச் செய்தார்.

இறுதி பருவத் தேர்வில் (Final Semester) 90%த்துடன் 2005ஆம் ஆண்டு தேர்ச்சி பெற்றேன். தேவன் அவர் வார்த்தையை நிறைவேற்றினார். இதே போன்று வேலை விஷயத்திலும் தேவன் அற்புதவிதமாய் நடத்தினார். இந்நாட்களுக்குள் எனது தகப்பனார் பணியிடம் மாறுதலாகி பெங்களூர் சென்றிருந்தார்கள். படித்து முடித்து எட்டு மாதங்கள் வேலை இல்லாதிருந்தேன். இந்த எட்டு மாதங்களுக்குள் தேவன் பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் செய்து என்னைப் பெலப்படுத்தினார். எட்டு மாதத்திற்கு பின்னர் என்னுடைய தோழி மூலமாய் தகவல் பெற்று பெங்களூரில் இருந்து மதுரையில் நடைபெறும் OFF CAMPUS என்ற பல கல்லூரிகளுக்கு பொதுவான வேலைவாய்ப்பு நேர்முகத்தேர்வில் கலந்து கொள்வதைக் குறித்து ஜெபித்தேன். அப்பொழுது தேவன் யோசுவா விசுவாசத்தால் கானானுக்குள் நுழைந்த அந்த சம்பவத்தை நினைவுப்படுத்தி அப்படியே விசுவாசிக்கும்படியாய் என்னை



ஏவினார். அந்த வழிநடத்துதலோடு 2000துக்கும் மேலான நேர்முகத் தேர்வர்கள் பங்கேற்கும் Off Campus Interview சென்றேன். அது 9 சுற்றுகள் கொண்ட தேர்வாய் இருந்தது. அந்த 9 சுற்றுகளிலும் தேவன் அற்புதமாய் நான் தேர்ச்சிப் பெற தகுதியற்றவளாய் இருந்தும் என்னை என்னை தேர்ச்சிப்பெறச் செய்தார்.

அந்த 2000 பேரில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 30 பெயர்களில் என் பெயர் இடம் பெற்றிருந்தது. இதில் ஓர் ஆச்சரியம் என்னவெனில் என் வகுப்பில் படித்து அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்த மாணவ/ மாணவியர் அந்த தேர்வில் தேர்ச்சி அடையவில்லை. ஆனால் வகுப்பில் கடைசி மாணவியாக இருந்த என் மீது தேவன் இரக்கம் பாராட்டினார். எந்த கல்லூரியில் Department notice Board இல் arrears Listஇல் என் பெயர் இடம் பெற்றிருந்ததோ அதே Notice Board அதிசயமாய் பொறியியல் கல்லூரியில் சிறந்த மற்றும் கல்லூரியை கௌரவித்தவர்கள் பட்டியலில் என் புகைப்படத்துடன் என் பெயர் இடம்பெற்றது. தேவன் வாக்குப்பண்ணினபடியே அற்பமான துவக்கத்தின் முடிவை சம்பூரணமாய் மாற்றினார்.

மேலும் அவருக்காய் காத்திருந்தபோது தேவன் எனக்கு இயேசுவை ஏற்றுக்கொண்ட கணவரை தேவனே தெரிந்தெடுத்து தந்து நல்ல மணவாழ்க்கையை 2007 ஆம் ஆண்டு ஏற்படுத்தினார். எனது கணவர் திரு. ஸ்டேன்லி அவர்களும் வங்கியில் IT மேலாளராக பணியாற்றுகிறார். எல்லாவற்றிக்கும் மேலாக எனது வாலிப வயதில் ஒரு நல்ல நண்பன் வேண்டும் என்ற தேடுதலுக்கு பதிலாய் இயேசு எனது நல்ல நண்பராய் இருந்தார். அன்று முதல் இன்று வரை ஒரு நல்ல நண்பராய் என் கரங்களை பிடித்த இயேசு இன்றும் என்னை அதிசயவிதமாய் நடத்தி வருகிறார். தேவனுடைய பெரிதான கிருபைகளுக்காய் அவரை நன்றியோடு ஸ்தோத்தரிக்கிறேன். ஆமென்.

---

12ம் பக்க தொடர்ச்சி...

## வல்லமை முகாம் – நடைபெறும் தேதி மே 16-18

இம்முகாம் நமது கிருபையின் ஊழியங்களின் மூலம் குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காக நடத்தப்படும் வருடாந்திர முகாமாகும்.

25. இம்முகாமின் தேவை ரூ.75.000./-சந்திக்கப்பட..
26. வல்லமை முகாமிற்கு வரும் குடும்பங்களின் வீடுகள் அப்12:12இல் உள்ள மரியாள் வீட்டைப் போல ஜெபவீடாக மாற...
27. அப்2:17இன்படி முகாமிற்கு வரும் குமாரர், குமாரத்திகள், பெரியவர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட..
28. அப்10:24இன்படி முகாமிற்கு வரும் குடும்பத்தினர் கொர்நேலியு போல் உறவினர் சிநேகிதர்களைக் கிறிஸ்துவுக்காய் ஆதாயம் பண்ணுகிற வர்களாய் மாற.. அவர்களை முகாமிற்கு தங்களுடன் அழைத்து வர..
29. அப்10:44இன்படி வசனத்தைக் கேட்கிறவர்கள் யாவரின் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்க...
30. முகாம் நடைபெறும் இடம் முழுவதையும் தேவன் ஆளுகை செய்ய
31. முகாமிற்கு தேவன் சரியான இடத்தை தெரிந்தெடுத்துதர

# உன் நம்பிக்கை வீண் அல்ல

Dr. B. வில்லியம் தர்ம ராஜா

"எதுவும் செய்யாமலே ஒருவருக்கு மேன்மை கிடைக்குமா?" – என்று உன்னைக் கேட்டால் அது எப்படி நியாயமாகும் என்று எதிர் கேள்வி நீ கேட்பாய், "நன்மை செய்தால் மேன்மை இல்லையோ" (ஆதி. 4:7) என்பது வேதம் கேட்கும் கேள்வி. இங்கு 'செய்தால்' என்ற வார்த்தையைக் கவனி. மேன்மை கிட்ட 'செய்வது' அவசியம்.

'சும்மா' இருந்து கொண்டு மேன்மை அல்லது உயர்வு பெறுதல் கூடாதது. நோவா நாற்பது நாள் பெருமழையிலிருந்து தப்ப நிறைய செய்ய வேண்டியிருந்தது. (ஆதி. 6:22) கண்ணீரோடே விதைப்பது, கெம்பீரத்தோடே அறுத்திட நீ செய்ய வேண்டிய மூலதனம்' காலையிலே விதை (பிர. 11:6). உனக்காக யாவையும் செய்து முடிக்கும் தேவன்; (சங். 138:8) 'நீ எதுவுமே செய்ய வேண்டியதில்லை' என்று கூறியதில்லை. வெற்றியை ஆண்டவர் தருவதற்கு, குதிரையை கூட ஆயத்தப்படுத்துவது (நீதி. 21:31) உனது வேலைதான். நீ வேலை செய்ய மாட்டேன் என்பாயாகில், உன் ஆசையே உன்னைக் கொன்றுவிடும் (நீதி. 21:25) நீ நேர்ந்து கொள்ளும் வழிக்கேற்ற பலனைப் புசிப்பது உறுதி (ரோமர் 2:6), நீ வெற்றி பெற வேண்டுமென்பதற்காக அந்தகார வழியையோ, துன்மார்க்க வழியையோ (நீதி. 2:21), கோணலான வழியையோ (நீதி. 10:9), புரட்டு வழியையோ தேர்ந்தெடுக்க கூடாது. இனிதான வழியை, நல்வழியை (நீதி. 23:19), நீதியின் வழியை (நீதி. 15:19), தேர்ந்தெடுக்க வேண்டும். தீமையை விட்டு விலகியிரு; பிறருடைய வழிகளெல்லமே நீ தெரிந்து கொள்ளக்கூடிய வழிகளாயிராது. தீயோருடைய வழியில் நடவாதே; (நீதி. 4:14). சோம்பேறித்தனம் வேண்டாம்; (நீதி. 15:19) நீ தூங்கி விடாதே; ஏனெனில் இது அறுப்புக்காலம், வேலைசெய்; சுறுசுறுப்பாக செய்; அசதியாயிராதே; வெட்டிப்பேச்சு பேசி காலத்தை விரயமாக்கிவிடாதே; உன் நம்பிக்கை வீண்போகாது (23:18), நீ எடுக்கும் முயற்சிகள் பலனில்லாமல் போகாது.

நீர் தேங்கி விட்டால், அது நதியல்ல; அது குட்டை; நீ தேங்கி விட்டால், நீயும் ஒரு குட்டை தான். நீ உளிகளின் வலிகளைப் பொறுத்துக் கொள்ள மாட்டேன் என்பாயாகில், ஒருக்காலும் சிற்பமாக முடியாது; காலமெல்லாம் சாதாரண கல்தான்.

உழைத்து உண்ணும் உணவின் சுவையே தனி சிறப்பு தான். கடின உழைப்பினால் கிட்டும் உணவின் (பலனின்) சுவை மிக அதிகம்.

நீ செய்து கொண்டிருப்பதுதான் உன்னால் செய்ய முடிந்ததா? இன்னும் உன்னால் செய்ய முடியாதா? 'நீ செய்ய முடிந்தைக் காட்டிலும் குறைவாகவே செய்கிறாய்' என்று உனக்குப்படுகிறதா? வேகத்தைக் கூட்டு; நேரத்தை கூட்டு; கழிக்க வேண்டியதைக் கழி; பெருக்க வேண்டியதை பெருக்கு.

தூக்கம் அளவுக்கு அதிகமாக வேண்டாம். தரித்திரனாகும் அளவிற்கு தூக்கம் வேண்டாம். காரியம் சாதிக்க தூக்கத்தை கண்களிலிருந்து தூரமாகவே வைத்துப் பழகு.



தேவனை மறந்த உழைப்பு நல்லதல்ல. ஆபத்துகளில் தேவன் உன்னோடிருப்பதை மறந்துவிடாதே, (சங். 50:15, 91:15) உன்னைக் கனப்படுத்துபவரும் உயர்ந்த இடத்தில் வைப்பவரும் (சங். 91:14,15) தேவனே. அவருக்குக் கொடுக்கும் நேரத்தில் பஞ்சம் வேண்டாம். ஏனெனில் அதுவே உனக்கு நிழல்; உனக்குக் கோட்டை' (சங். 91:1,2) என்பதை மறவாதே.

சில பலன்கள் உடனே கிடைக்கும்; சில அநேக நாட்களுக்குப் பின் கிடைக்கும். (பிரசங்கி 11:1) உடனே கிடைக்கும் பலன் சில நாட்களுக்கு முன் செய்த செயல்களால்; அநேக நாட்களுக்குப் பின் கிடைத்த பலன் அநேக நாட்களுக்கு முன் செய்த செயல்களால்; (பிர. 11:6) கிடைக்க இருக்கும் பலன்கள், செய்துவிட்ட செயல்களால்; செயல்படாமலிராதே. தொடர்ந்து செய். தேவனுக்குப் பிரியமானவைகளைச் செய். சோர்வின்றி செய். கடினமாய் உழை. உன் நம்பிக்கை வீண் போகாது. (நீதி. 23:18).

---

*ஊழியங்களுக்காய் முழங்காலில்*

**ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கம்**

## MECOGEN - V.B.S - 2013 - ஜெபக்குறிப்புகள்

இவ்வூழியம் விசேஷமாக கிராம சிறுவர்களுக்காக ஆலயமில்லா கிராமங்களை மையமாக வைத்து நடத்தப்படும் ஊழியமாகும். இந்த ஆண்டு 325 கிராமங்களுக்கும் மேலாக ஒவ்வொரு கிராமங்களிலும் 6 நாட்கள் நடத்தி அதன்மூலம் 16,500 சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தைச் சொல்லத் திட்டமிட்டுள்ளோம்.

1. வெளி3:8இன்படி நாம் திட்டமிட்டபடி 325 கிராமங்களுக்கும் மேலாக கிராமங்களில் திறந்த வாசலை கர்த்தர் நமக்குத் தரும்படியாக...
2. சங்.49:2இன்படி சிறுபிள்ளைகள் செவிகொடுக்க...
3. மாற்.18:14இன்படி எல்லா சிறுவர்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ள..
4. ஏசா.54:17இன்படி எதிர்ப்புகள் மாற...
5. தன்னார்வ ஊழியர்களைப் பயிற்றுவிக்க நடைபெறும் 2 நாட்கள் பயிற்சி வகுப்புகள் (4 இடங்களில்) தேவன் ஆசீர்வதிக்க..
6. இவ்வூழியத்திற்குத் தேவையான 400 தன்னார்வ ஊழியர்களை தேவன் எழுப்ப...
7. நமது ஊழியர்களுடன் தன்னார்வ ஊழியர்கள் கிராமங்களில் பணி செய்யும்போது சக.9:8இன்படி தேவ பாதுகாப்பு இருக்க...
8. ஒரு சிறுபிள்ளைக்குச் சுவிசேஷம் சொல்ல ஆகும் செலவு ரூ..75வீதம் 16.500 பிள்ளைகளைத் தாங்கும் விசுவாச தேவ பிள்ளைகளை அனுப்பித்தர அல்லது ரூ.3000 வீதம் கொடுத்து ஒரு VBS ஐ தாங்குவோரை தேவன் எழுப்ப..
9. கடந்த ஆண்டில் எதிர்ப்பினால் நடத்த முடியாமல் போன கிராமங்களில் தடைகளை மாற்றி, இந்த ஆண்டு நடத்த தேவன் கிருபை தர....
10. இந்த ஆண்டில் திட்டமிட்டுள்ள VBSகள் 325

11. இந்த ஆண்டு VBSஇன் மொத்த தேவை ரூ. 9 இலட்சத்து 75 ஆயிரம் சந்திக்கப்பட
12. நமது மிஷனெரிகளை தன்னார்வ ஊழியர்களை தேவன் வியாதி பெலவீனங்கள் தாக்காது காத்துக்கொள்ள...
13. VBSநடைபெறும் கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட தேவன் வாசல்களை திறக்க.
14 VBS நடைபெறும் கிராமங்களில் தேவன் செழிப்பை ஆசீர்வாதத்தைக் கட்டளையிட.

## முப்பெரும் முகாமிற்கான ஜெபக்குறிப்புகள்

**கீழ்க்காணும் இந்த மூன்று முகாம்களும் மே மாதம் 16 – 18 தேதிகளில் ஒரே வளாகத்தில் ஒரே நேரத்தில் வேறு வேறு ஹால்களில் நடைபெறும். முகாம் நடைபெறும் இடம் அடுத்த மாதம் தெரிவிப்போம். இதன் மொத்த தேவை ரூ. 1 இலட்சத்து 75 ஆயிரம்**

### *வெற்றி முகாம்* – நடைபெறும் தேதி மே 16~18

இம்முகாம் நமது ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கத்தின் மூலம் வாலிப சகோதர சகோதரிகளின் ஆசீர்வாதத்திற்காக ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நடைபெறும் வருடாந்திர முகாமாகும்.

15. வெற்றி முகாமின் தேவை ரூ.60.000 சந்திக்கப்பட
16. ஏசா43:5-7 வசனங்களின் படி தேவன் முகாமிற்கு வாலிப சகோதர சகோதரிகளைக் கொண்டு வரும்படியாக...
17. ஏசா44:3இன்படி முகாமிற்கு வரும் சந்ததியும் சந்தானமுள்ள வாலிபர் மேல் பரிசுத்த ஆவியாவரையும் ஆசீர்வாதத்தையும் தேவன் ஊற்ற..
18. ஏசா49:25இன்படி பராக்கிரமன் பிசாசினால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் பெலவந்தன் சாத்தானல் கொள்ளையிடப்பட்டவர்களுமான வாலிபர்கள் அநேகர் அசுத்த ஆவியின் வல்லமையினின்று விடுதலையாகி இந்த முகாமில் இரட்சிக்கப்பட.
19. அப்21:10இன்படி முகாமிற்கு வரும் வாலிபர்கள் தீர்க்கதரிசிகளாய் மாற..

### *குதூகல முகாம்* – நடைபெறும் தேதி மே 16~18

இம்முகாம் நமது ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கத்தின் மூலம் சிறுவர்களின் ஆசீர்வாதத்திற்காக ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நடைபெறும் வருடாந்திர முகாமாகும்.

20. இம்முகாமின் தேவை ரூ.40.000 சந்திக்கப்பட
21. ஏசா54:14இன்படி முகாமிற்கு வரும் பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப்பட சமாதனம் பெருக..
22. மத். 19:14இன்படி சிறு பிள்ளைகள் முகாமில் தடையில்லாமல் கலந்து கொள்ள..
23. மாற்10:16இன்படி முகாமிற்கு வரும் பிள்ளைகள் இயேசு அணைத்து ஆசீர்வதித்து பாதுகாக்கும்படி...
24. மத்20:16இன்படி குழந்தைகள் பாலகர்களுடைய வாயினால் தேவனைத் துதிக்கும் துதி பெருக..

**தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க**



# கிறிஸ்த்துவ தலைமைத்துவம்

Dr.P.செல்வராஜ்

சிலர் தலைமைத்துவத் திறனோடு பிறக்கிறார்கள். சிலர் தலைமைத்துவப் பயிற்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். முதலாம் பிரிவைச் சார்ந்தோரின் தலைமைத்துவமானது பயிற்சியினால் இன்னும் மெருகேரும் என்று கூறலாம். தலைமைத்துவத் திறனுடையோர் புதிய சிகரங்களை அடைகிறவர்களாகவும், சிறப்பின் உயர் அளவை எட்டுகிறவர்களாகவும் இருப்பர். ஒரு சிறிய கூழாங்கல் ஆற்றில் தொடரலைகளைத் தோற்றுவிக்கும். அதைப்போல உங்களுடைய சிறிய முயற்சி உங்களுடைய வாழ்க்கையையும் ஏன் உலகத்தையும் மாற்றக் கூடும்.

எல்லோருமே ஏதாவது ஒருவகையில் தலைமைத்துவத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் பெற்றோராக, ஆசிரியராக, நிறுவனராக, போதகராக, ஆனால் உலகம் கூறும் தலைமைத்துவம் கிறித்துவ அல்லது பணிவிடைத் தலைமைத்திற்கு எதிரானது. முன்னது பணிவிடை பெற்றுக்கொள்ளும் உரிமை பற்றியது. பின்னது பணிவிடை செய்யும் வாய்ப்பைப் பற்றியது. பணிவிடைத் தலைமைத்துவமானது தேவகிருபையில் துவங்கி, தேவகிருபையுடன் செயல்படுகிறது. உயர்நிலை தலைமைத்துவத்திற்கு உயர்நிலை மனத்தாழ்மை இன்றிமையாதது. “அவர் (இயேசுகிறிஸ்து) தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். (பிலி2:6,7) “மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார்.” (மாற்கு 10:45).

பணவிடைத்தலைவருக்குப் பதவி முக்கியமல்ல குழுவில் இடம் பெற்றிருப்பதே மகிழ்ச்சி. பணிவிடைத்தலைவர் பிறருக்கு உதவுவதற்கென்றே இருக்கிறார். பணிவிடைத் தலைவருக்கென்று தனிப்பட்ட குறிக்கோள் எதுவும் இல்லை.

எடுத்துக்காட்டாக, இராணுவமானது அடித்தளத்திலிருந்து மேல்நோக்கி தலைவர்களை உருவாக்குவதைப்பற்றிப் பேசுகிறது. ஆனால் பரலோகத்திலிருந்து கீழ்நோக்கி தலைவர்களை உருவாக்குவதே தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. கிறித்துவ தலைமைத்துவம் எத்துணை சிறந்தது பார்த்தீர்களா!.

### “நிறைவாக வாழும் முறை”

“இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்: அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது. 1தெச5:16,17)

எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறும்/செலுத்தும் வாழ்க்கை வாழுங்கள். அதுதான் நீங்கள் நிறைவுடன் / முழுமையாக வாழும் முறையாகும்.

அத்தகைய வாழ்க்கையை யாரால் வாழமுடியும் என்று நீங்கள் கேட்பது என்னுடைய செவிகளில் தொனிக்கிறது. அத்தகைய வாழ்க்கையை வாழவேண்டுமெனில் நீங்கள் எத்தகைய மானிடராயிருக்கவேண்டும்? Superhuman இருக்கவேண்டுமா? இல்லை அது அவ்வளவு கடினமல்ல. எல்லாவற்றிலும் தேவனிடம் நம்பிக்கையுடையவர்களாக இருந்தால்போதும் நம்மால் எல்லாக் சூழ்நிலையிலும், இந்த பாவம் நிறைந்த உலகில் நன்றியுள்ள நன்றிசெலுத்தும் வாழ்க்கை வாழமுடியும். இடைவிடாத மன்றாட்டு எல்லாச் சூழ்நிலையிலும் / சூழ்நிலைக்காகவும் நன்றிசெலுத்துதல் ஆகிய இரண்டும் கிறிஸ்து இயேசு வழியாய் தேவன் வெளிப்படுத்திய அவருடைய திருவுளம் / சித்தம்.

அநேகர் நன்றிசெலுத்துதலைக் குறித்து தவறான எண்ணமுடையோராய் இருக்கின்றனர். தாங்கள் பெற்ற நன்மைகளை ஆசீர்வாதங்களை நினைவுகூர்ந்து நன்றிசெலுத்துவோரின் இதயங்களின் ஆழத்தில் பாடுகள், வேதனைகள், ஏமாற்றங்கள், சோதனைகள் காணப்படுகின்றன. பலர் தங்களுடைய சூழ்நிலைகளை மையப்படுத்தி வாழ்கின்றனர். மாறாத தேவனை மையப்படுத்தி வாழுங்கள். அவரே நம்முடைய நன்றியுள்ள வாழ்க்கைக்கு வள ஆதாரமாக இருக்கிறார். மார்ட்டின் லுத்தர் பரிந்துரை செய்த காலை மன்றாட்டிலும் மாலை மன்றாட்டிலும் இயேசு கிறிஸ்துவின் வழியாக இறைவனுக்கு தேவனுக்கு நன்றி கூறுவது / செலுத்துவது இடம்பெறுகிறது.

ராபர்ட் ஷ்யுல்லர் தனக்கு வயது ஆக ஆக “ நேர்மறையான சிந்தனையின் வல்லமை” எனும் தலைப்பிற்கு கருப்பொருளுக்குப் பதிலாக “*சிலுவையின வல்லமை*”யைக் குறித்து கற்பிக்கலானார். ஒருமுறை அவர் ஒரு கருத்தரங்கில் உரையாற்றுவதற்காக கொரியாவிற்கு சென்றிருந்தார். கூட்டத்திற்கு முந்தையநாளில் அவருக்கு அமெரிக்காவிலிருந்து ஒரு அவசரச்செய்தி வந்தது. அவருடைய மகள் ஒரு பெரிய விபத்துக்குள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தாள். கொரியாவின் விமானநிலையத்தில் அவரை சந்தித்த கொரிய போதகர் டாக்டர்.சோ “இந்த சூழ்நிலைக்காக தேவனுக்கு நன்றிசெலுத்தினீர்களா?” என்று அவரைப் பார்த்துக் கேட்டார். “இதற்காக நான் எப்படி தேவனுக்கு நன்றிசெலுத்தமுடியும்?” எனும் கேள்வி பயணம் முழுவதிலும் அவருக்குள் எழுந்துகொண்டே இருந்தது. அமெரிக்காவின் விமானநிலைய குளியலறைக்குள் சென்று ராபர்ட் ஷ்யுல்லர் நன்றிசெலுத்தி தேவனிடம் ஜெபித்தார். தன்னுடைய மகளைப் பார்த்த அவருக்கு மறுபடியும் “ இதற்காக நான் எப்படி தேவனுக்கு நன்றிசெலுத்தமுடியும்?” எனும் கேள்வி எழுந்தது. ஆனால் அவருடைய மகளோ நான் ஒரு காலை இழந்தநிலையிலும், தன்னுடைய வாழ்க்கைக்காகவும், தன்னுடைய குடும்பத்திற்காகவும் நன்றிசெலுத்தினாள். ஷ்யுல்லருக்கு அது ஒரு பாடமாக இருந்தது. “Scars” – ஐ (வடுக்களை) “Stars”-ஆக(விண்மீன்களாக) மாற்றமுடியும் என்பதை அவர் புரிந்துகொண்டார். நீங்கள் எப்படி?.



# தேர்வுக்குப் பின்...

பா. பொற்செல்வன் ஆசீர்

1. உங்கள் எதிர்காலம் கர்த்தரின் கரத்தில் உள்ளது என்ற உண்மையை மறவாது ஜெபியுங்கள். சங்33:22
2. உங்கள் மதிப்பெண் கர்த்தரின் கரத்தில் உள்ளது. நீங்கள் பெறும் மதிப்பெண்கள் உங்கள் எதிர்காலம் என நினையாதிருங்கள். கர்த்தரே உங்கள் எதிர்காலமும் அதின் நம்பிக்கையும் ஆதாரமுமாம்.
3. உங்கள் மதிப்பெண்களைத் தன் கரத்தில் வைத்திருக்கும் கர்த்தரே உங்கள் எதிர்கால மேன்மையையும் தன் கரத்தில் வைத்திருக்கிறார் என்பதை விசுவாசித்து அறிக்கையிடுங்கள். எரே29:11
4. தேர்வு முடியும் வரை ஜெபிக்கும் அநேகர் தேர்வு முடிந்தபின் தங்கள் தேவனை தேடுவதை விட்டுவிடுவார்கள். சீரான ஜெபவாழ்வை ஆவிக்குரிய வாழ்வை காத்துக் கொள்ளுங்கள். தானி6:10
5. நீங்கள் ஆண்டு முழுவதும் படித்து 3 அல்லது 2½மணி நேரம் எழுதிய தேர்வுகளை அதிகபட்சம் 5-7 நிமிடங்களில் திருத்தி மதிப்பிடப் போகிறார்கள். எனவே சரியான மதிப்பீடு பெற வேண்டும் நீங்கள் பெற வேண்டிய எந்த ஒரு மதிப்பெண்ணையும் நீங்கள் இழந்தும் விடக்கூடாது. எனவே திருத்துவோருக்காக ஜெபியுங்கள். சங்.34:4
6. நீங்கள் பெற்ற மதிப்பெண்கள் பதிவேடுகளில் பதிவு பெறும்போது எந்த தவறுகளும் நிகழக்கூடாது அதற்காக ஊக்கமாக ஜெபியுங்கள். சங் 33:9
7. தேர்வு முடிந்தபின் மேற்படிப்பிற்கு உள்ள வாய்ப்புகளை தேடி கண்டுபிடியுங்கள். நீங்கள் அறிந்திராத புதிய மேற்படிப்பு வாய்ப்புகளை பற்றி அறிய விரும்புங்கள். சங். 31:19
8. உங்கள் எதிர்காலம் மேற்படிப்பு பற்றிய தேவதிட்டம் குறித்து தெளிவைப்பெற தேவனிடத்தில் ஊக்கமாக ஜெபியுங்கள். சங் 32:8
9. விடுமுறை நாட்கள் சும்மா சோம்பி இருக்கும் நாட்கள் என நினையாது தேவன் தர இருக்கும் மேன்மைக்கு நாம் ஆயத்தப்படும் வாய்ப்பு என நம்பி உங்களை ஆயத்தப்படுத்துங்கள். சங்.34:5
10. விடுமுறை நாட்களில் தேவனோடு உங்கள் உறவை மேம்படுத்துங்கள். சங் 26:8

குறிப்பு: இந்தப் பகுதியை இணைத்து கொடுக்கப்பட்டுள்ள வசனத்தோடு இணைத்து திறந்த வேதத்தோடு வாசியுங்கள்.

***மேல் படிப்பிற்கு புது வழிகள் சில...***

1. Indian Institute of Sience Education and Research போபால் கொல்கத்தா, மொஹாலி, புனே, திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் உள்ளது.

   +2 முடித்த மாணவ மாணவியர்களுக்கு 5 ஆண்டு அறிவியல் கல்வி உதவித்தொகை உண்டு. Cental Human Resource Development Dept. கட்டுப்பாட்டில் உள்ள கல்வி நிறுவனங்கள் இவைகள். Website: WWW. liser-admissions.in
2. இந்தியாவில் 43 மத்திய பல்கலைக் கழகங்கள் உண்டு. தமிழகத்தில் திருவாரூரில் மத்திய பல்கலைக்கழகம் உள்ளது. +2 படித்த எந்தப் பாடப்பிரிவு கற்றவரும் இணைந்து படிக்க வாய்ப்பு உள்ளது. இதற்கு நுழைவு தேர்வு உண்டு ***Central University Common Entrance Test-CUCET***எழுத வேண்டும். Website: hitp://cutn.ac.in
3. ***Marine Engineering and Research Institute - Calcutta, +2*** மாணவர்களுக்கு வாய்ப்பு Website:WWW.merical.ac.in
4. ***Forest Research Institute -*** டேராடுன் இளமறிவியல் கற்ற மாணவர்களக்கு வாய்ப்பு. Website:WWW.icfre.gov.in
5. ***National sugar Institute -*** காண்பூர் இளமறிவியல் கற்ற மாணவர்களுக்கு வாய்ப்பு Website: hitp://nsi.gov.in

---

துதியுங்கள்! துதியுங்கள்!!

## Philio 2013

கர்த்தருடைய கிருபையினாலும், உங்கள் யாவருடைய ஜெபத்தினாலும் இளைஞர் இனிய பெருவிழாவை பிப். 14 தேதியன்று தேவன் ஆசீர்வாதமாக நடத்தித் தந்தார். கூட்டத்தின் முந்தின இரண்டு நாட்கள் மழை பெய்த போதும் கூட்ட நேரத்தில் மழை பெய்யாது தேவன் பாதுகாத்தார். 15000க்கும் மேற்பட்டோர் கூட்டங்களில் கலந்து கொண்டார்கள். தேவன், சகோ. மோகன் C. லாசரஸ் அவர்களை ஆசீர்வாதமாக பயன்படுத்தினார். சகோ. B. வில்லியம் தர்மராஜா அவர்கள் கொடுத்த ஆலோசனை, மாணவர்களை தெளிவு பெறச் செய்ததாக அமைந்தது. **'வெற்றிப்பாதையில் நான்'** என்ற மாணவர்களுக்கான சிறப்பு புத்தகம் ஜெபத்துடன் வெளியிடப்பட்டது. பேராயர் Rt.Rev.Dr.J.A.D. ஜெபச்சந்திரன் அவர்கள் தலைமை தாங்கி சிறப்பித்தார்கள். அநேக திருச்சபை போதகர்கள் கலந்து கொண்டு உற்சாகப்படுத்தினார்கள்.



# *கோடைகால விடுமுறையில் மாணவர்கள்*

**"கோடைக்காலத்தில் (எறும்பு) தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து அறுப்பு காலத்தில் தனக்கு தானியத்தை சேர்த்து வைக்கும்"(நீதி 6:8).**

அன்புள்ள மாணவச் செல்வங்களுக்கு.

இரட்சகரின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

விடுமுறை என்றாலே மாணவர்களுக்கு அலாதி பிரியம். அதிலும் கோடை விடுமுறை என்றால் கேட்கவே வேண்டாம். கோடை விடுமுறையில் என்னென்ன செய்வது என யோசித்துக் கொண்டிருப்பீர்கள். சில வழிமுறைகளைச் சொல்கிறேன். சிந்தித்து செயல்படுங்கள்!

இந்த உலகம் போட்டிகள் நிறைந்த உலகமாயிருப்பதால் மாணவ மாணவிகளாகிய நீங்கள் காலத்தை வீணாக்கி விடவேண்டாம்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் எல்லோருமே விடுமுறைகளில் தட்டெழுத்துப் பயிற்சி பெறுவர். இன்று அதே இடத்தைக் கம்ப்யூட்டர்கள் பிடித்துக் கொண்டன. நீயும் ஏதாவது ஒரு Computer Language படிக்கலாம். குறைந்த பட்சம் ஏதாவது ஒரு Package படிக்கலாம். அதோடு தட்டெழுத்துப் பயிற்சியும் மேற்கொள்ளுவது நல்லது. தட்டெழுத்துப் பயிற்சியை 6 வகுப்பு முதல் பயில இயலும். 8ஆம் வகுப்பு முடித்ததும் தட்டெழுத்து அரசு தேர்வு எழுதலாம். கம்யூட்டர் களை திறமையாகப் பயன்படுத்த தட்டெழுத்துப் பயிற்சியும் தேவை என்பதை மறவாதிருங்கள்.

கைக்கடிகாரங்களைச் சரிசெய்யும் பயிற்சி, T.V சரிசெய்யும் பயிற்சி, கம்யூட்டர் Hardware பயிற்சி, DTPபோன்ற பயிற்சிகளைப் பெறலாம். அதன் மூலம் படிக்கும் காலத்திலேயே உன் தேவைகள் சிலவற்றை பூர்த்தியாக்கும் அளவிற்கு நீ சம்பாதிக்க முடியும்.

நீ ஆங்கிலத்தில் புலமை குன்றியிருந்தால் வீட்டுப் பக்கத்தில் படித்தவர்கள் அல்லது ஆசிரியர்கள் இருந்தால் அவர்களிடம் தொடர்ந்து சென்று ஆங்கிலத்தைப்படி உனது ஊரில் Spoken English பயிற்சி கொடுத்தால் அப்பயிற்சி பெறலாம். (நீதி.4:7) ஞானத்தை புத்தியை சம்பாதிக்க அல்லவோ கற்றுத்தருகிறது.

நீ ஏதாவது பாடத்தில் கஷ்டப்படுவாயென்றால் அந்த குறிப்பிட்ட பாடத்தில் படித்தவர்களின் உதவியை நாடு.

உதாரணமாக +1 முடித்து +2 போகும் மாணவன் கணக்கு இயற்பியல் வேதியியல் பாடங்களில் வேதியியலை கடினமான பாடம் என நினைப்பானாகில் அக்குறிப்பிட்ட பாடத்தை கோடைவிடுமுறையிலேயே படிக்க ஆரம்பித்து விடலாம்.

நீ வறுமையில் வாழ்பவனாயிருந்தால் உனது படிப்புக்குத் தேவையானவற்றை நீயே சம்பாதித்துக்கொள். எந்த வேலையையும் செய்ய வெட்கப்படவேண்டாம். எனது மாணவன் ஒருவன் கோடைவிடுமுறைகளில் கட்டட வேலைகள் செய்வான். அதனைக் கொண்டு புத்தகங்கள் வாங்குவான். இவன் நீதி 6:8ற்கு ஒத்த வாழ்க்கை வாழ்பவன்.

நிறைய புத்தங்கள் வாசியுங்கள். புத்தகங்களே நல்ல நண்பர்கள் என்று கூறுவர். குறைந்தபட்சம் வாரத்திற்கு ஒரு ஆவிக்குரிய புத்தகமாவது வாசி. வேத வாசிப்பிலும் ஜெபத்திலும் அதிக நேரத்தைச் செலவழி.

தாவீதைப் போல இசையில் ஆர்வம் கொண்டவனாய் நீ இருந்தால் ஏதாவது ஒரு இசைக்கருவியை வாசிக்க கற்றுக்கொள். அதன் மூலம் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த முடியும்.

மே 16 முதல் 19 தேதிகளில் நடக்கும் கிருபை ஊழியத்தின் முப்பெரும் முகாமில் (சிறுவர்களுக்கு குதூகலமுகாம், வாலிபர்களுக்கு வெற்றி முகாம், பெரியவர்களுக்கு வல்லமை முகாம்)கலந்து கொள்ளுங்கள். முகாமைக்குறித்து 9443289026 என்ற அலைபேசியை தொடர்புகொள்ளுங்கள் அல்லது இது போன்ற ஏதாவது ஒரு முகாமில் கலந்து கொள்ளுங்கள். அப்போதுதான், “நான் அசைக்கப்படுவதில்லை” என தவீதைப் போல நாமும் சொல்லமுடியும். மேலும் ஆண்டவருக்காய் ஏதாகிலும் செய்ய வேண்டும் என்ற பாரமுடையவனாயிருந்தால், அவருடைய பணியை எப்படி செய்யவேண்டும் என கேள்வி உடையவனாயிருந்தால் நமது ஊழியத்தில் நடைபெறும் ஆலயமில்லா கிராம VBSஇல் தன்னார்வ ஊழியராய் பங்குபெற அழைக்கிறோம்..

தமிழகத்தின் 11 மாவட்டங்களில் 44பணித்தளங்களில் 300க்கு மேற்பட்ட கிராமங்களில் VBSகள் நடைபெறும் அதற்கு 350க்குமேற்பட்ட தன்னார்வ ஊழியர்கள் தேவை ஒரு கிராமத்தில் VBS திங்கள் முதல் சனி வரை 6 நாட்கள் நடைபெறும். பணித்தளங்களில் தங்கி கிராமங்களில். சென்று விடுமுறை நாட்களை தேவனுக்காக பயன்படுத்தலாம். ஆயத்தமானால் எங்களோடு 9443289026 என்ற அலைபேசியில் தொடர்புகொள்ளுங்கள். அல்லது இதுபோன்ற ஏதாவது ஓர் ஊழிய பயிற்சித்திட்டத்தில் கலந்து கொண்டு ஊழிய வாழ்வின் பாடுகள், தியாகங்கள், ஆசீர்வாதங்கள், மேன்மை ஆகியவற்றை நேரில் கண்டறிந்து நீயும் கிறிஸ்துவுக்கென நல்ல போர்ச் சேவகனாகலாமே!

இப்போது, நீ என்ன செய்யலாம் என முடிவு எடுத்திருப்பாய் என எண்ணுகிறேன். நீ கோடை விடுமுறையை பயனுள்ள முறையில் கழித்ததைக் குறித்து எங்களோடு பகிர்ந்து கொள்.

அன்புடன்

**B.வில்லியம் தர்மராஜா.**



# நீங்கள் ஆயத்தப்படும்போது

அன்பு தம்பி, தங்கைகளுக்கு,

கல்வி தேர்வுக்கு ஆயத்தம் அதுவும் ஆண்டு இறுதித் தேர்வுக்கு ஆயத்தம் என்பது ஒரு பந்தயம் போன்றது அல்லவா. ஆயத்தப்படும் உன்னை பயங்களும், சந்தேகங்களும், சோர்வுகளும் ஆட்கொள்ளலாம். கீழ்க்காணும் ஆலோசனைகள் உனக்கு மிகுந்த பயனுள்ளதாய் அமையும் என்பதில் சந்தேகமில்லை. எதிர்பார்ப்போடும், நம்பிக்கையோடும் பயன்படுத்து. செயல்படுத்து. வெற்றி நிச்சயம். உன் நம்பிக்கை வீண் போகாது.

1. எந்தப் பாடத்தின் எந்தப் பகுதியும் முக்கியமானதல்ல என்று விட்டுவிடாதே.
2. புரியவில்ல, கடினமாய் உள்ளது என்பதால் இக்கேள்வி தேர்வில் வரக்கூடாது என்ற தவறான எண்ணத்தை விட்டுவிட்டு, புரிந்து கற்க பெரியவர்கள், ஆசிரியர்கள் உதவியை நாடி, மறுபடியும் முயற்சி செய். முயற்சி திருவினையாக்கும். வெற்றி உன்னுடையதே!
3. உன்னைச் சுற்றிலும் படிப்பிற்கு இடையூறான சூழல்கள் இருக்குமானால் வாய்விட்டு உங்கள் சத்தம் உங்களுக்கு கேட்கும் அளவுக்கு படி. இவ்விதம் ஒரு நேரம் படிப்பது இரண்டு தடவை மௌனமாய் படிப்பதற்குச் சமம்.
4. வாய்விட்டு படிப்பது மற்ற கவனச் சிதறல்களைத் தவிர்க்க மிகவும் உதவும்.
5. தேர்வில் வரும் கேள்விகளை முன்னரே அறிய சீட்டுப்போடுதல், புத்தகத்தை மூடித்திறத்தல் போன்றதவறான முறைகளை ஒழித்து விடு. அது சோம்பேறித்தனத்திற்கு வழி வகுக்கும்.
6. தேர்வில் கடினமான கேள்விகள் வரக்கூடாது என்றோ, தேர்வில் வரும் கேள்விகளை முன்னரே அறியும் நோக்குடனோ இறைபக்தியை பயன்படுத்தும் முறைமை தவறான நடக்கையாகும். தேவன் ஒருவருக்கும் தவறான வழியில் உதவி செய்கிறவரல்ல. தேவன் தவறு செய்கிறவருமல்ல என்பதை மறவாதே.
7. உனக்கு முன் இருக்கும் இந்த நாட்களில் சரியான ஆயத்தம் செய்ய நேரத்தை வீணாக்காது பிரயாசப்படு. இன்னும் காலங்கடந்து விடவிடல்லை. வெற்றி நிச்சயமே.
8. எனக்கு மனப்பாடம் செய்ய இயலாது என்ற எண்ணத்தைத் தவிர்த்து, என்னால் முடியும் என்ற சிந்தையோடு மனப்பாடப் பகுதிகளை படி. அது முழு மதிப்பெண் பெறும் வழியல்லவா.
9. கற்றவைகளை நினைவுப்படுத்தி பார்க்க நேரம் ஒதுக்கு. அதனை திட்டமிட்டபடி காலம் தாழ்த்தாது செய். திட்டமின்றி செயல்படுவது என்பது தோல்விக்கு திட்டமிடுவதாகும் என்கிறார் ஒரு கல்வியலார்.

10. இரவில் வெகுநேரம் கண்விழித்துப் படிப்பதைத் தவிர்த்து குறைந்தபட்சம் 5 மநூ நேரமாகிலும் நன்றாகத் தூங்கு. தூங்குகிறவர்கள் இரவிலே தூங்குவார்கள். இரவிலே படித்து பகலிலே தூங்குவது தேர்வறையிலும் தூங்க வைக்கும். மட்டுமல்ல. இயற்கை விதியை மீறுவது உடல் பெலத்தைக் குன்றவைக்கும்.

11. குறித்த நேரத்திற்கு சற்று முன்பாக தேர்வரையில் வந்து அமர்ந்து இதுவரை செய்த முயற்சிகளுக்கு பெலன் தந்த தேவனுக்கு நன்றி கூறு. இது கடைசி நேர பதற்றத்தை தவிர்த்து, நல்சிந்தை ஆயத்தத்தை உன் மனதிற்கு தேர்வு நேரத்தில் தரும்.

12. தேர்வு எழுத புதிய பேனா, புதிய இரப்பர் போன்றவை தவிர்த்து நீ எழுதிப்பழகிய பேனா போன்றவையே பயன்படுத்து. அது தேர்வறையில் ஏற்படும் எதிர்பாராத பதற்றங்களைத் தவிர்க்கும்.

13. தேர்வறையில் காப்பியடித்தல், பிட்ஸ் உபயோகித்தல் போன்றதீய செயல்களுக்கு விலகி காத்துக் கொள்ளுங்கள். அது நேரத்தை வீணாக்கும். சுய நம்பிக்கையைத் தகர்க்கும் சோம்சேறியின் வழி. இம்முறைகளால் உயர்ந்த மதிப்பெண் பெற்றஎவரையும் நீங்கள் காணமுடியாது. தீவினை செய்ய உபாயம் செய்கிறவன் துஷ்டன் என்னப்படுவான்.

14. நண்பருக்கோ, மற்றோருக்கோ பரிதாபம் கொண்டு தேர்வறையில் சொல்□க்கொடுக்கும் பழக்கத்தைத் தவிர்த்துவிடு. அது உன் மதிப்பெண்ணை இழக்க வைக்கும்.

15. தேர்விற்கு தேவையான பேனா, பென்சில் போன்றவற்றை தேர்வறையில் வைத்து இரவல் வாங்குவது, இரவல் கொடுப்பது ஆகிய இரண்டையும் தவிர்த்திடுங்கள். அது நேர விரயத்தையும் தேவையில்லா பதற்றத்தையும் கொண்டு வரும்.

16. ஒவ்வொரு தேர்வும் எழுதி முடித்த பின்னும் தேவனுக்கு நன்றி சொல்ல பழகு. அது நல்ல பயிற்சி.

17. தேர்வு எழுதி முடித்தபின் அந்த பதில் விடைகளைக் குறித்து நண்பர்களுடன் கலந்து ஆலோசித்து சரியா தவறா என தீர்மானிக்கும் பழக்கத்தைத் தவிர்த்து உடன் அடுத்த தேர்வைக் குறித்து சிந்தித்து செயல்படு. எழுதியதை ஆலோசிப்பதால் அதை மாற்றஇயலாதே. ஆனால் அது தேவையில்லா குழப்பதைக் கொண்டு வர இயலுமே.

18. எதிர்காலத்திற்கு தேவையான இலக்குகளை கல்வியிலும், உங்கள் வாழ்விலும் தெரிந்து கொண்டு, அவைகளையே உங்கள் நோக்கமாக்கி வெற்றியோடு சுதந்தரிக்கும் வழிகளை விசாரித்து, அறிந்து நம்பிக்கையோடு முயற்சி செய். நல்யோசனை செய்து யுத்தம் பண்ணு; ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயம் கிடைக்கும்.



| | |
|---|---|
| மார்ச் 2 | குடும்ப முகாம், கொளக்கட்டாகுறிச்சி, SBM Church |
| மார்ச் 10 | CSI ஆலயம், தூய மிகாவேல் ஆலயம், போல்பேட்டை, தூ-டி. |
| மார்ச் 15,16,17 | தூய பேட்ரிக் ஆலயம், தூத்துக்குடி மாவட்டம் |
| மார்ச். 22,23,24 | அபிஷேக நாதர் ஆலயம், சிதம்பரநகர், தூத்துக்குடி |
| மார்ச் 25, 27 | CSI ஆலயம், கால்டுவெல்காலனி, தூத்துக்குடி |
| மார்ச் 26 | CSI ஆலயம், ஏழாயரம்பண்ணை |
| மார்ச் 29, 30,31 | போத்தனூர், கோவை. |

ஜெபியுங்கள்

**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

*தேவனுடைய கூடாரத்தில்*

# திறப்பின் வாயில் ஜெபம்

**2013 மார்ச் 27 கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

*நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்! இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!*

*நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் அனுப்பலாம்.*

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194

## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

**நாள் : 2013 மார்ச் 26 – கடைசி செவ்வாய்**
**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**
**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**
**பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**

### *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம் | | | |
| Grace Ministries | SBIN0007629 | SBI Bazaar, Tuticorin | 10237757808 |
| Grace Ministries | TMBL0000156 | TMB Ltd., Sipcot Tuticorin | 156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம் | | | |
| Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம் | | | |
| Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.